பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

*26 05 2026 TUESDAY* *7 15PM*

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. இந்தோ - பசிபிக் மண்டலத்தில் தடையற்ற பொருளாதார நடவடிக்கைகளை உறுதி செய்ய QUAD நாடுகள் அமைப்பு உறுதிபூண்டுள்ளதாக இந்தியா கூறியுள்ளது.

2. ஊடுருவல் உள்ளிட்ட காரணங்களால் மக்கள்தொகையில் ஏற்படும் மாற்றத்தை கண்காணிக்க மத்திய அரசு உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளது.

3. பெட்ரோலியப் பொருட்களின் விலையை கட்டுக்குள் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.

4. கிழக்கு லெபனான் பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.

5. மால்டோவா சர்வதேச சேலஞ்ச்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

இந்தோ - பசிபிக் மண்டலத்தில் தடையற்ற பொருளாதார நடவடிக்கைகளை உறுதி செய்ய QUAD நாடுகள் அமைப்பு உறுதிபூண்டுள்ளதாக இந்தியா கூறியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் QUAD வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை ஒட்டி நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை கூடுதல் செயலர் திரு. நாகராஜ் நாயுடு, கடல்சார் பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, பேரிடர் கால மீட்பு மற்றும் நிவாரண உதவி ஆகியவற்றுக்கு உறுப்பு நாடுகள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தோ - பசிபிக் கடல்சார் கண்காணிப்பு அமைப்பு இன்று தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்கு இது பெரிதும் உதவிடும் என்றும் அவர் கூறினார்.

தீவிரவாதத்தை எந்த வடிவிலும் அனுமதிப்பதில்லை என்று QUAD வெளியுறவு அமைச்சர்கள் இம்மாநாட்டில் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, QUAD அமைப்பு கூட்டறிக்கை வெளியிட்டதாகவும் திரு. நாகராஜ் நாயுடு கூறினார்.

>>>>><<<<<

ஊடுருவல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நாட்டின் மக்கள்தொகை அதிகரிப்பதை கட்டுப்படுத்த ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி திரு. பிரகாஷ் பிரபாகர் நவ்லேகர் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

இத்தகவலை சமூகவலை வலைதளத்தில் தெரிவித்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி துர்கா சங்கர் மிஸ்ரா, ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி திரு. பாலாஜி ஸ்ரீவஸ்தவா, பொருளாதார நிபுணர் டாக்டர் ஷமீகா ரவி ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவின் உறுப்பினர் செயலராக உள்துறை அமைச்சகத்தின் இணைச்செயலர் செயல்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடுருவல் உள்ளிட்ட காரணங்களால், மக்கள்தொகையில் ஏற்படும் மாற்றங்கள் பெரும் சவாலாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

சட்டவிரோத குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை இந்த உயர்மட்டக் குழு ஆய்வு செய்து, மக்கள்தொகை கணக்கெடுப்பில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் நெடுஞ்சாலை திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.

பஞ்சாபில் 4 ஆயிரம் கிலோமீட்டர் தூர நெடுஞ்சாலைகள், ஹரியானா, தில்லி பகுதியில் 3 ஆயிரம் கிலோமீட்டர் தூர நெடுஞ்சாலைகள் பணிகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

திட்டப் பணிகளை குறிப்பிட்ட காலத்தில் முடிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், தரமான கட்டமைப்பை உறுதி செய்தல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் திரு. நிதின் கட்கரி அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

காதி கிராம தொழில்கள் ஆணையம், கடந்த நிதியாண்டில் ஒரு லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாக அதன் தலைவர் திரு. மனோஜ்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் கொள்கை காரணமாகவும், ஊரகப் பகுதிகளில் வாழும் கைவினைக் கலைஞர்களின் கடும் உழைப்பின் மூலமும் இந்த சாதனை எட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

காதி கிராம தொழில்கள் ஆணையம் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளித்து வருவதாகவும், இதில் 80 சதவீதம் பேர் மகளிர் என்றும் அவர் தெரிவித்தார்.

12 ஆண்டுகளுக்கு முன்னர், இந்த ஆணையத்தின் வருவாய் 30 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

காதி பொருட்களின் விற்பனையை அதிகரிக்க, பிரத்யேக மின் வணிகத் தளம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் திரு. மனோஜ்குமார் கூறினார்.

>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலத்தில் இன்று நேரிட்ட இருவேறு சாலை விபத்துகளில் 10 பேர் உயிரிழந்தனர்.

Unnao மாவட்டத்தில், ஆக்ரா – லக்னோ விரைவுச்சாலையில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 10 பேர் லக்னோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

Barabanki மாவட்டத்தின் பூர்வாஞ்சல் விரைவுச் சாலையில், கார் ஒன்று விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் நாகப்பட்டிணம் – தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழி திருவாரூர் புறவழிச்சாலை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி, இந்த புதிய வழித்தடத்தின் மூலம் திருச்சி, கோவை, நாகப்பட்டினம், காரைக்கால் உள்ளிட்ட பகுதிகளில் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்றும் கூறியுள்ளார்.

இந்நிலையில், இந்த நெடுஞ்சாலை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு தமிழக மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வதாக மாநில பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

பெட்ரோலியப் பொருட்களின் விலையை கட்டுக்குள் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்காசிய போர்ச் சூழல் போன்றவற்றால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ள போதிலும், பொதுமக்களுக்கு விலையை உயர்த்தாமல் கடந்த சில மாதங்களாக பெட்ரோலியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வந்ததாக தெரிவித்தார்.

எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டும் வகையில், அதனை சமநிலைப்படுத்தும் விதமாக தற்போது அவற்றின் விலையில் சிறிய அளவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. சுரேஷ் கோபி கூறினார்.

>>>>><<<<<

நடப்பாண்டுக்கான பத்ம விருதுகள் நேற்று புதுதில்லியில் வழங்கப்பட்டன.

*தமிழகத்தைச் சேர்ந்த ஓதுவார் திரு. சுவாமிநாதன், பத்மஸ்ரீ விருது பெற்றது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார்.*

*இத்தகைய அங்கீகாரத்தை வழங்கியுள்ள மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. சுவாமிநாதன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் சுவாமிநாதன் 30 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*சர்வதேச அளவில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக, சென்னை, மதுரை ஆகிய நகரங்களின் ஐந்து இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனார்.*

*சர்வதேச போதைப்பொருள் கடத்தல் குற்றவாளி ஜான் பிரிட்டோ உள்ளிட்டவர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட இரண்டு புகார்கள் தொடர்பாக இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.*

*சர்வதேச அளவில் பெருமளவிலான போதைப் பொருட்கள் கடத்தல் நடைபெற்றிருப்பதாக அமலாக்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*இலங்கை வழியாக 258 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் கடத்தப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.*

*>>>>><<<<<*

*கிழக்கு லெபனான் பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.*

*Veka பள்ளத்தாக்கில் ஹிஸ்புல்லா அமைப்பின் முகாம்களை குறித்து வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.*

*லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்த தாம் உத்தரவிட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.*

*கிழக்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவின் கட்டமைப்புகளை அழிக்க இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*இஸ்ரேல் - லெபனான் இடையே அமைதி பேச்சுவார்த்தை அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் இந்த வாரம் நடைபெறவுள்ள நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.*

*இதனிடையே, தெற்கு லெபனானில் இஸ்ரேல் ராணுவத்தின் மீது ஹிஸ்புல்லா அமைப்பு தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.*

*>>>>><<<<<*

*மால்டோவா சர்வதேச சேலஞ்ச் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 6-2 என்ற செட்கணக்கில் உஸ்பெகிஸ்தானின் Sergey Fomin-ஐ வென்றார்.*

*>>>>><<<<<*

*சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-18 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Putri Wardani-யை வென்றார்.*

*இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது*

*>>>>><<<<<*

*பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - பிரேஸிலின் Marcelo இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>><<<<<*

*ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள முதலாவது **Qualifier** ஆட்டத்தில் பெங்களூரு அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.*

*தரம்சாலாவில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற குஜராத் அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.*

*>>>>><<<<<*